18th September 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Rs. 41,841·50 for the period October 1956 to March 1958. The amount has been fully paid.

(*c*) Two hundred and forty patients.

(*d*) No, Sir.

Leprosy Hospital.

*306 *Q.*—SRI A. GOVINDASAMY : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமாரி மாவட்டத்திலுள்ள குளச்சல் பகுதி உடையார் விளையிலுள்ள எல். எம். எஸ். குஷ்டரோக ஆஸ்பத்திரிக்கு சர்க்கார் உதவி வந்த நிதி தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறதா ?

(ஆ) அப்படியானால் காரணம் என்ன ?

(இ) இந்த சகாய நிதியை சர்க்கார் கொடுக்க தவறியதால் நோயாளிகள் வெளியேற்றப்படுவது சர்க்கார் அறியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir, but the grant for the quarter ended 31st March 1958 was not disbursed.

(*b*) The attendance register and case cards of leprosy patients treated in the hospital were not properly maintained.

(*c*) No, Sir.

SRI T. T. DANIEL : In view of the fact that this Leper Hospital is the only hospital in that district which is doing social service for more than 30 years, will the Government consider the desirability of giving in time the grant which this hospital was getting before integration so that the Government may not be put to the difficulty of running this institution in future?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I already stated that the amount was paid towards maintenance. Now, the rules require the maintenance of accounts, case cards and all that. They were not properly maintained and the Inspecting Officer had drawn the attention of the authorities concerned to it. If they are kept in order, then there will be no delay.

SRI A. GOVINDASAMY : சர்க்காரின் உதவி கிடைக்காத காரணத்தினாலே பல நோயாளிகள் சிகிச்சை செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். இந்த ஆஸ்பத்திரியில் கணக்குகள் சரியாக வைக்கப்படவில்லையென்றால், கணக்குகள் ஒழுங்கான முறையில் வைக்கப்படவேண்டுமென்று தாக்கீது அனுப்பி, சர்க்கார் கொடுத்துவந்த நிதி தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதை, அரசாங்கம் மீண்டும் கொடுப்பதற்கு முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏற்கனவே ரூ. 41,000 கொடுத்திருக்கிறோம். சில புகார்கள் வந்ததால் 'செக்' செய்து கொண்டிருக்கிறோம். நோயாளியே இல்லாமல் பணம் வாங்கப்படுவதாக புகார் வந்திருக்கிறது. அதையெல்லாம் பார்த்துத்தான் செய்யவேண்டும்.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது குஷ்ட நோய் சிகிச்சைக்கு 'ஸல்போன் டிரக்ஸ்' மிகவும் பயன் உள்ளதாக, 'எபெக்டிவ்' ஆக இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்த மருந்தை எல்லா ஆஸ்பத்திரிகளிலும் கிடைக்கும்படி செய்து ஆங்காங்குள்ள குஷ்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும்படி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

[18th September 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த முறையிலும் சிகிச்சை தீவிரமாக செய்யப்பட்டு வருகிறது.

SRI M. K. SOMASUNDARAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் குஷ்டநோய் ஆஸ்பத்திரி இருந்தும், பஸ் ஸ்டாண்டுகளில் குஷ்ட நோயாளிகள் அலைந்துகொண்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

MR. SPEAKER : இது ஒரு பொது கேள்வியாக இருக்கிறதே ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முன்பு ஒரு காலத்தில் இம்மாதிரி பஸ் ஸ்டாண்டில் குஷ்ட நோயாளிகள் அலைந்து கொண்டிருக்கலாம். இப்பொழுது அது மிகவும் குறைவு.

SRI A. CHIDAMBARANATHA NADAR : கொளச்சல் குஷ்டரோக ஆஸ்பத்திரியை சர்க்கார் எடுத்து நடத்துவதற்கு யோசனை உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது தனியார் துறையிலே இது நடந்துகொண்டிருக்கிறது. அதை நன்றாக ஒழுங்குபடுத்தி நடத்தினாலே போதும்.

SRI T. S. RAMASWAMY PILLAI : இந்த ஆஸ்பத்திரி பற்றி புகார் வந்ததாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நல்ல முறையில் இந்த ஆஸ்பத்திரி நடந்துகொண்டு வருகிறது என்று அங்கெல்லாம் சொல்லுகிறார்கள். ஆகவே, எங்கே, யாரிடமிருந்து எத்தகைய புகார் வந்தது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒரு ஆஸ்பத்திரி இம்மாதிரி நல்ல முறையில் சிகிச்சை செய்வது நல்லதுதான். அப்படி செய்கின்ற வகையிலே சில தில்லுமுல்லான விஷயங்கள் நடந்துகொண்டு வருகின்றன என்று புகார் வந்திருக்கிறது.

SRI T. SAMPATH : Sir, may I know the basis on which these grants are generally given to these hospitals?

THE HON. SRI M. A. MANICKAVELU : On a capitation basis.

SRI A. GOVINDASAMY : இந்த ஆஸ்பத்திரியில் நோயாளிகள் வராமலே பணம் வாங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொளச்சல் பகுதியிலிருந்து ஒரு அமைச்சர் வந்திருப்பதால், அந்தப் பகுதியிலுள்ள இந்த ஆஸ்பத்திரிக்கு அந்த அமைச்சர் விஜயம் செய்து இந்த புகார் உண்மைதானா என்பது பற்றி விசாரித்து அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பார்களா ?

MR. SPEAKER : I do not think the Hon. Minister is going to reply to it.

Leprosy.

*274 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the people of Ayigoundenpalayam, Perundurai firka of Erode taluk, during 1958, regarding prevalence of leprosy in the villages; and

(*b*) if so, the action taken by the Government to control the disease?